DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)

IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE, PALLADAM

Calender

Miscellaneous Case No:CC 64 of 2016

Preliminary Register

Sessions

Deposition of Witness for PW 3

Name : திருமதி.கலாமணி

Age : 52

Father's/Husband's Name : வேலுச்சாமி

Village : சாமிகவுண்டன்பாளையம்

Taluk : பல்லடம்

Occupation : தறி வேலை

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the 16th day of March 2021

முதல் விசாரணை: நாள்.16.03.2021

நான் தற்போது மேற்கண்ட முகவரியில் குடியிருந்து தறி வேலை செய்து வருகிறேன். அ.சா.1 எனது மகன் . அ.சா.2 எனது கணவர் ஆவார். கடந்த 16.09.2015 அன்று இரவு 10 மணியளவில் வீட்டின் உள்தாழ்ப்பாளிட்டு நான், எனது மகன், என் கணவர் ஆகியோர் வீட்டிற்குள் தூங்கிக்கொண்டிருந்தோம். விடிந்ததும் அதிகாலை சுமார் 3.40 மணியளவில் கதவை யாரோ நெம்பி உடைப்பதுபோல் என் மகன் சொன்னார். நாங்கள் எழுந்து லைட் போட்டு பார்த்தபோது கதவின் தாழ்ப்பாள் உடைந்திருந்தது. உடனே நாங்கள் போன் செய்து என் வீட்டருகில் குடியிருககும் என் கணவரின் சித்தப்பா மகன் கணேசனுக்கு தகவல் சொன்னோம். உடனே அவர் எங்கள் வீட்டிற்கு வந்தார். வந்து கணேசன் தான் வீட்டில் நிறுத்தியிருந்த சுசுகி இருசக்கர வாகனத்தை காணவில்லை என்று கணேசன் கூறினார். நாங்கள் அக்கம் பக்கத்தில்

வண்டியையும், அந்த நபரையும் தேடினோம். ஆனால் அந்த நபர் கிடைக்கவில்லை, எங்கள் வீட்டருகே உள்ள தோட்டத்தில் வண்டி மட்டும் இருந்தது. அங்கு யாரும் இல்லை. அன்று அதிகாலை என்பதால் உடனே சென்று காவல்நிலையத்தில் புகார் கொடுக்க இயலவில்லை, அதனால் அன்று காலை 8 மணிக்கு காவல்நிலையம் சென்று என் மகன் ரவிக்குமார் புகார் கொடுத்தார். யாரோ ஒரு நபர் எங்கள் வீட்டில் உள்ள பொருட்களை திருட முயற்சி செய்ததாக தெரியவந்தது. போலீசார் என்னை விசாரித்தார்கள்.

எதிரிகள் தரப்பில் குறுக்குவிசாரணை

எதிரிகள் தரப்பில் குறுக்குவிசாரணை செய்யப்படவில்லை, எனவே எதிரி தரப்பு குறுக்குவிசாரணை முடிக்கப்பட்டுவிட்டது.

மறுவிசாரணை: இல்லை

சாட்சி விசாரணை என்னால் தட்டச்சருக்கு நேரடியாக சொல்லப்பட்டு, அவரால் கணினியில் நேரடியாக தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழைகள் திருத்தப்பட்டு சரிபார்க்கப்பட்டது. சாட்சியிடம் கொடுத்து அவர் படித்து பார்த்து சரியென கையெழுத்து செய்தார்.

ஒம்/து.ஹரிராம்
நீதித்துறை நடுவர்
பல்லடம்

DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)

IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE, PALLADAM

Calender

Miscellaneous Case No:CC 64 of 2016

Preliminary Register

Sessions

Deposition of Witness for PW 2

Name : திரு.வேலுச்சாமி

Age : 64

Father's/Husband's Name : முருகசாமி

Village : சாமிகவுண்டன்பாளையம்

Taluk : பல்லடம்

Occupation : --

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the 16th day of March 2021

முதல் விசாரணை: நாள்.16.03.2021

நான் தற்போது மேற்கண்ட முகவரியில் குடியிருந்து வருகிறேன். அ.சா.1 எனது மகன் ஆவார். கடந்த 16.09.2015 அன்று இரவு 10 மணியளவில் வீட்டின் உள்தாழ்ப்பாளிட்டு நான், எனது மகன், என் மனைவி கலாமணி ஆகியோர் வீட்டிற்குள் தூங்கிக்கொண்டிருந்தோம். 17.09.2015 அன்று அதிகாலை சுமார் 3.40 மணியளவில் கதவை யாரோ நெம்பி உடைப்பதுபோல் என் மகனுக்கு சத்தம் கேட்டது என்று என்னையும், என் மனைவியையும் எழுப்பினார். உடனே நாங்கள் போன் செய்து என் வீட்டருகில் குடியிருககும் சித்தப்பா மகன் கணேசனுக்கு தகவல் சொன்னோம். அவர்கள் உடனே எங்கள் வீட்டிற்கு வந்து கணேசன் வீட்டில் நிறுத்தியிருந்த இருசக்கர வாகனம் TN 39 N 1015 என்ற இருசக்கர வாகனத்தை காணவில்லை என்று கணேசன் கூறினார். நாங்கள் அக்கம் பக்கத்தில் வண்டியையும், அந்த நபரையும் தேடினோம். ஆனால் அந்த நபர்

கிடைக்கவில்லை, ஒரு அரை கிலோ மீட்டர் தள்ளி அந்த இருசக்கர வாகனம் ஒயர் கனெக்சன் எல்லாம் கழற்றிய நிலையில் ஸ்டார்ட் செய்வதற்கு முயற்சி செய்த நிலையில் இருந்தது. அன்று அதிகாலை என்பதால் உடனே சென்று காவல்நிலையத்தில் புகார் கொடுக்க இயலவில்லை, அதனால் அன்று காலை 8 மணிக்கு காவல்நிலையம் சென்று என் மகன் ரவிக்குமார் புகார் கொடுத்தார். யாரோ ஒரு நபர் எங்கள் வீட்டில் உள்ள பொருட்களை திருட முயற்சி செய்ததாக தெரியவந்தது. போலீசார் என்னை விசாரித்தார்கள்.

எதிரிகள் தரப்பில் குறுக்குவிசாரணை

எதிரிகள் தரப்பில் குறுக்குவிசாரணை செய்யப்படவில்லை, எனவே எதிரி தரப்பு குறுக்குவிசாரணை முடிக்கப்பட்டுவிட்டது.

மறுவிசாரணை: இல்லை

சாட்சி விசாரணை என்னால் தட்டச்சருக்கு நேரடியாக சொல்லப்பட்டு, அவரால் கணினியில் நேரடியாக தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழைகள் திருத்தப்பட்டு சரிபார்க்கப்பட்டது. சாட்சியிடம் கொடுத்து அவர் படித்து பார்த்து சரியென கையெழுத்து செய்தார்.

ஒம்/து.ஹரிராம்
நீதித்துறை நடுவர்
பல்லடம்

DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)

IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE, PALLADAM

Calender

Miscellaneous Case No:CC 64 of 2016

Preliminary Register

Sessions

Deposition of Witness for PW 1

Name : திரு.ரவிக்குமார்

Age : 29

Father's/Husband's Name : வேலுச்சாமி

Village : லட்சுமி மில்

Taluk : பல்லடம்

Occupation : தறி வேலை

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the 16th day of March 2021

முதல் விசாரணை: நாள்.16.03.2021

நான் தற்போது மேற்கண்ட முகவரியில் குடியிருந்து தறிவேலை செய்து வருகிறேன். கடந்த 16.09.2015 அன்று இரவு 10 மணியளவில் வீட்டின் உள்தாழ்ப்பாளிட்டு நான், எனது அப்பா வேலுச்சாமி, என் அம்மா கலாமணி ஆகியோர் வீட்டிற்குள் தூங்கிக்கொண்டிருந்தோம். 17.09.2015 அன்று அதிகாலை சுமார் 3.40 மணியளவில் கதவை யாரோ நெம்பி உடைப்பதுபோல் எனக்கு சத்தம் கேட்டது. நான் உடனே என் அப்பாவையும், அம்மாவையும் எழுப்பி சத்தம் வருவதாகவும், யாரோ உடைப்பதாகவும் சொன்னேன். லைட் போட்டு பார்த்தபோது கதவின் உள் தாழ்ப்பாள் உடைக்கப்பட்டு கதவு பாதி திறந்த நிலையில் இருந்தது. நாங்கள் சத்தம் போட்டதை கேட்டு அருகிலிருக்கும் எனது சித்தப்பா கணேசன் எங்கள் குடோனில் வேலை செய்யும் நபர்கள் எல்லாம் வந்து பார்த்தபோது யாரும் இல்லை. அந்த சமயத்தில் சித்தப்பா வீட்டில்

நிறுத்தியிருந்த இருசக்கர வாகனம் TN 39 N 1015 என்ற இருசக்கர வாகனத்தை காணவில்லை. நாங்கள் உடனே பக்கத்தில் தோட்டத்தில் இருசக்கர வாகனத்தையும், திருடிய நபரையும் தேடிப்பார்த்தோம். அந்த நபர் கிடைக்கவில்லை. ஆனால் வண்டி மட்டும் பூட்டு உடைந்த நிலையில் தோட்டத்தில் கிடந்தது. நாங்கள் உடனே வண்டியை வீட்டிற்கு எடுத்துக்கொண்டு வந்தோம். ஆதலால் யாரோ ஒரு நபர் வண்டியை திருடுவதற்காகவும், எங்கள் வீட்டில் இருந்த பொருட்களை திருட முயற்சி செய்ததாகவும் தெரியவந்தது. அன்று அதிகாலை என்பதால் உடனே சென்று காவல்நிலையத்தில் புகார் கொடுக்க இயலவில்லை, அதனால் அன்று காலை 8 மணிக்கு காவல்நிலையம் சென்று புகார் கொடுத்தேன். தற்போது என்னிடம் காட்டப்படும் புகார் நான் கொடுத்ததுதான். அதிலுள்ள கையொப்பம் என்னுடையதுதான். அந்த புகார் அ.சா.ஆ.1., போலீசார் என்னை விசாரித்தார்கள்.

எதிரிகள் தரப்பில் குறுக்குவிசாரணை

எதிரிகள் தரப்பில் குறுக்குவிசாரணை செய்யப்படவில்லை, எனவே எதிரி தரப்பு குறுக்குவிசாரணை முடிக்கப்பட்டுவிட்டது.

மறுவிசாரணை: இல்லை

சாட்சி விசாரணை என்னால் தட்டச்சருக்கு நேரடியாக சொல்லப்பட்டு, அவரால் கணினியில் நேரடியாக தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழைகள் திருத்தப்பட்டு சரிபார்க்கப்பட்டது. சாட்சியிடம் கொடுத்து அவர் படித்து பார்த்து சரியென கையெழுத்து செய்தார்.

ஒம்/து.ஹரிராம்
நீதித்துறை நடுவர்
பல்லடம்